மலர் 1 இதழ் 2 அக்டோபர், 2016 ISSN : 2454-3993

# தொல்காப்பியத்தில் பயின்று வழங்கிய என்மனார் என்னுஞ் சொல்

வே.விக்னேசு
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தவத்திரு. சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் கல்லூரி, பேரூர்

## தோற்றுவாய்

இற்றைக்கிருக்கும் இயற்றமிழ் இலக்கண நூல்களுள் காலத்தாற் பழமையானதும் உரை பலவாகச் சமைந்ததுமான பெருநூல் தொல்காப்பியம் ஒன்றேயாம். இந்நூலுள் ஆசிரியர் தொல்காப்பியனாருக்கு முதுவர் வழங்கியனவாகவும் தொல்காப்பியனார் தாமே படைத்தாண்டவையாகவும் பல அரிய சொற்கள் பிறங்குகின்றன. அவ்வகையிற்றானே, தொல்காப்பியத்தில் எழுபத்து மூன்றிடங்களில் பயின்றுவரும் "என்மனார்" என்னுஞ் சொல்லே இக்கட்டுரை ஆராயக்கொண்ட ஆய்பொருளாம்.

## என்மனார்

"என்மனார்" என்னுஞ் சொல்லைத் தொல்காப்பியனார் எழுத்ததிகாரத்தில் மட்டும் இருபது இடங்களில் பெய்துள்ளார். எழுத்ததிகாரத்திற்கு உரை பகன்ற இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் இச்சொல் இருபதிடங்களில் பயின்றுவரினும் ஆண்டெல்லாம் இச்சொற்கு இலக்கணங்கூறாது, சொல்லதிகாரத் தலைச்சூத்திரத்தில் இச்சொல் பயின்றுவந்துள்ள இடத்திலேயே முதற்கண் இச்சொற்கு இலக்கணங் கூறியுள்ளனர். எனில், எழுத்ததிகாரத்தில் இச்சொற்கு இலக்கணங்கூறாது, சொல்லதிகாரத்தில் இலக்கணங்கூறியது என்னை? என்ற வினா எழுகிறது. ஆசிரியர் தொல்காப்பியனார் தம் கூற்றாகக் கூறுமிடங்களில் விதந்தோதியும், பண்டையோர் கூற்றாகக் கிளக்குமிடங்களில் என்ப, மொழிப, மொழிமனார், என்றிசினோர் என்பன போன்ற சொன்னடைகளானும் கூறுவர். இங்ஙனம், "என்மனார்" என்னுஞ் சொல்லும் தொல்காப்பியனார் தம் முந்து நூலாரைக் குறிக்க வழங்கிய சொல்லேயாம். ஆசிரியர் தொல்காப்பியனார் எச்சொல்லையும் யாண்டும் வெற்றெனத் தொடுத்தலின்றி இன்றியமையாத சொற்களையே புணர்த்து நூலியற்றும் நல்லியல்பினரென்பதை நன்குணர்ந்த இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் சொல்லதிகாரத்

தலைச்சூத்திரத்தில் "என்மனார்" என்னுஞ் சொல்லைத் தொல்காப்பியனார் இருமுறை பெய்துள்ள நுண்மையை ஓர்ந்தோஈண்டு இச்சொற்கு இலக்கணங்கூறினரெனல் ஓராற்றான் பொருந்தும்.

இத்தகு பெற்றிமை வாய்ந்த இச்சொற்கு இலக்கணம் கூறுவதில் உரையாசிரியன்மாரும், அறிஞர்களும் தம்முள் கருத்து வேறுபடுகின்றனராகலின், அவர்கள்தம் உரைகளை ஒப்பிட்டுத் தக்கதைக் கோடல் வேண்டத்தக்கதாம்.

**இளம்பூரணார்**

என்மனார் என்னுஞ் சொற்குப் பொருளுரைக்கும் இளம்பூரணர், "என்மனாரென்புது என்ப என்னும் முற்றுச் சொல்லைக் "குறைக்கும் வழிக் குறைத்தல்" (எச்ச-7) என்பதனான் பகரங்குறைத்து, "விரிக்கும் வழி விரித்தல் (எச்ச-7) என்பதனான் மன்னும் ஆரும் என்பன இரண்டிடைச் சொற்பெய்து விரித்தான ' "(தொல்-சொல்-இளம்.நூ.1) எனக் கூறுமாற்றை ஆய்ந்துநோக்கில், என்மனார் என்புத விகாரச்சொல். இச்சொல் "என்ப"என்பதனடியாகப் பிறந்தது. "என்ப"என்பது இயற்சொல் அ/து தொல்காப்பியனாரால் பகரத்தைக் குறைக்கும் வழிக் குறைத்தலால் குறைத்தும், மன், ஆர் என்பன பெய்து விரிக்கும் வழி விரித்தலால் விரிப்புழி "என்மனார்"எனவரும் என்பது இவர் கருத்தாம்.

**சேனாவரையர்**

"என்ப" என்னும் முற்றுச் சொல்லைக் குறைக்கும் வழிக்குறைத்தல், விரிக்கும் வழி விரித்தல் என்பதனான் பகரங்குறைத்து, மன்,ஆர் என இரண்டிடைச் சொற் பெய்து விரித்தார் தொல்காப்பியனார் என்னும் இளம்பூரணர் கருத்தைச் சேனாவரையர், இரு காரணங்களான் மறுக்கின்றார். அவர்மறுக்குமாறு:-

"என்மனார்" என்பது இடர்பட்டுழிச் சிறுபான்மை வாராது இந்நூலுள்ளுஞ் சான்றோர் செய்யுளுள்ளும் பயின்று வருதலானும், "இசைநிறை" என்பது மறுத்துப் பொருள் கூறுகின்றார். பின்னும் இசைநிறை என்றல் மேற்கோள் மலைவாதலானும் அவர்க்கது கருத்தன்றென்க"(தொல்-சொல்-சேனா.நூ.1) என்பது அம்மறுப்பு. அதாவது, (க) என்மனார் என்னுஞ் சொல் இலக்கணங்களிலும் சான்றோர் செய்யுட்களிலும் பயின்று வருதலின், என்மனார் என்பது இயற்கைச் சொல்லேயாம். அன்றியும், இளம்பூரணர் கூறுமாப்போல இது விகாரச் சொல்லன்றாம். ஆகலின், இளம்பூரணர் கூறியாங்கு "என்ப" என்னுஞ் சொல்லைத் தொல்காப்பியனாரே "என்மனார்" எனத்திரித்துவிட்டார் எனல் பொருந்துவதன்றாம் என்பது முதற்காரணம். இம்மறுப்பு ஏற்புடைத்தாம்.

(உ) இடையியலில் "மன்" என்பது இசைநிறைக்க வரும் எனத் தொல்காப்பியனார் ஆண்டுக் கூறினாரல்லர். எனில், ஈண்டு "மன்" என்பது இசைநிறையில் வரும் என்பது, இளம்பூரணர் தாம் உரைவரையயெடுத்துக் கொண்ட மூலநூலுக்கே மாறுபாடாகும். (மேற்கோள் மலைவாகும்). எனவே இளம்பூரணர் கூற்று ஏற்புடைத்தன்றாம் என்பது சேனாவரையர் கூறும் இரண்டாவது காரணம். இம்மறுப்பினை ஆய்ந்துநோக்குழி, "இசைநிறையென்பது மறுத்துப் பொருள் கூறுகின்றார்" என இளம்பூரணர் கூற்றாகச்

சேனாவரையர் கூறும் பகுதி அச்சிட்ட இளம்பூரணருரையில் இல்லை. ஆயின், இசைநிறையென்பது மறுத்துப் பொருள் கூறுகின்றவர் யாரென்பது ஆராயத்தக்கதாம்.

அங்ஙனமே, சேனாவரையர் கருத்துப்படி "என்மனார்" என்னுஞ் சொல், செய்யுள் முடிபெய்தி நின்றதோர் ஆரீற்று எதிர்கால முற்றுச் சொல்லாம்.

**நச்சினார்க்கினியர்**

என்மனாரென்பது, ஓர் ஆரீற்று நிகழ்கால முற்றுவினைத் திரிசொல் என்பது நச்சினார்க்கினியர் நுவலும் விளக்கம்.

**தெய்வச்சிலையார்**

இச்சொற்கு இலக்கணங்கூறும் தெய்வச்சிலையார், "என்மனார் என என்பவென்னும் முற்றுச் சொல் திரிந்துநின்றது" எனப் பொருளுரைத்து, "குறைக்கும் வழிக்குறைத்தல் என்பதனான் பகரம் குறைத்து, விரிக்கும் வழி விரித்தல் என்பதனான் மன்னும் ஆருமென இரண்டிடைச் சொற்பெய்து என்மனார் என்றாயிற்று எனப் பொருளுரைப்பவாலெனின், பகரங்குறைக்கின்றது செய்யுளின்பம் வேண்டியன்றே? ஆண்டுக் குறைத்தவழிப் பின்னும் இரண்டெழுத்து விரிக்கல் வேண்டுமாயிற் குறைத்ததனாற் பயனின்மையின் இவ்வாறு எழுதும் உரை குற்றமென்க."(தொல்-சொல்-தெய்.நூ.1) என்பதான் இளம்பூரணரைப் பெயர் சுட்டாது நுட்பமாக மறுத்துச் சொல்கிறார் இவர்.

**கல்லாடனாரும் ஒருவரும்**

"என்மனார்" என்னுஞ் சொற்குக் கல்லாடனாரும் ஒருவரும் (பழையவுரைக்காரர்) இளம்பூரணர் கருத்தைத் தழுவியே சொன் முடிவுரைத்துள்ளனர்.

**மு.வரதராசனார்**

மு.வரதராசனார் தம் "மொழியியற் கட்டுரைகள்" எனப் பெயரிய நூலில் "பெரியோர் சிறுபிழை" என்னுந் தலைப்பிலமைந்த கட்டுரையில் "என்மனார்" என்னுஞ் சொல் பற்றி விரிவாக ஆய்ந்துரைத்தப் பகுதி ஈண்டு ஒப்பிட்டுக் காணற்குரியதாம்.

"தொல்காப்பியத்தில் பயின்று வழங்கிய ஒரு சொல்லை வரலாற்று முறைகொண்டு ஆராயாமல், தருக்கமும் வாய்ப்பாடும் மட்டுமே கொண்டு ஆராய்ந்த காரணத்தால், உரையாசிரியர்கள் பலரும் இச்சொல்லிற்குப் பல்வேறு வகையாக விளக்கம் கூறியுள்ளனர்" (மு.வரதராசனார் - மொழியியற் கட்டுரைகள் சென்னை. ப-234) என்றுரைக்கும் மு.வ., இச்சொற்கு இளம்பூரணர் தரும் விளக்கத்தைச் சுட்டி,"என்ப" என்பதிலிருந்து பிறந்த சொல் என்மனார் என்பது. என்ப என்பதில் முதலில் பகரம் கெட்டது. பின்னர் மன், ஆர் இரண்டும் சேர்ந்தன என்று இளம்பூரணர் கூறுவதை ஆய்ந்துநோக்கில், "ஏன் கெட்டது, ஏன் சேர்ந்தன? இத்தகைய வரலாறு உண்டா என்ற ஆராய்ச்சிகள் இல்லை" (மேற்படி. ப-234) என்றுரைக்கிறார்.

அங்ஙனமே, இச்சொற்குச் சேனாவரையர் தரும் விளக்கத்தையும் கூறி, "செய்யுண் முடிபு என்ற ஒன்றைக் கூறிவிளக்கமில்லாமல் விடுகின்றார் இவர். நோய் வந்தகாரணம், நோயின் தன்மை முதலியன கூறாமல், நோய்க்கு ஒருபுதிய பெயர்கூறி மருட்டும் முறை போன்றது இது. இளம்பூரணர் தந்த விளக்கத்தையும் மறுத்து, அவர்க்கும் தம் கருத்தே கருத்து என்று அமைதி கூறுகிறார்."(மேற்படி.ப-235) என நுண்ணிதின் உரைக்கும் மு.வ., நச்சினார்க்கினியார், தெய்வச்சிலையார் இருவரும் இச்சொற்குத் தரும் இலக்கணத்தைச் சுட்டி,"என்மனார்" என்னுஞ் சொற்குத் தக்க சான்றுகளான் விளக்கங் கூறுகிறார்.

அவர் கூறுமாறு:

"இந்தச் சொல்லைப் பற்றி இவ்வளவு தடுமாற்றம் வேண்டுவதில்லை.

என்+ற் +ஆர் - என்றார்

என் +ற் +அன் +அர் - என்றனர்

என்ற சொற்கள் அன் பெற்றும் பெறாதும் இருவேறு வகையாக அமைதல் போலவே,

என் +ம் +ஆர் - என்மார்

என் +ம் +அன் +அர் - என்மனார்

என அன் பெற்றும் பெறாதும் இருவேறு வகையாக அமையும் எனக் கொள்ளல் பொருந்தும். மகரம் (உம் என்பதில் உயிர்கெட்டு நின்று) எதிர்காலத்தை உணர்த்துகிறது எனக் கால இடைநிலைகாட்டலும் எளிதாகும். சேனாவரையரும் தெய்வச்சிலையாரும் எதிர்காலம் உணர்த்துவதாகக் கருதுதலும் இதற்குத் துணைபுரிகிறது. என்மார் என்றசொல் மார் விகுதியுடையது என்றும், வினையொடு முடிவது என்றும், என்மனார் என்பது செய்யுள் முடிபு என்றும், மன்,ஆர் என்பவை காரணமின்றிச் சேர்ந்தவை என்றும் பற்பல வகையாகக் கூறி இடர்ப்பட வேண்டுவதில்லை" (மேற்படி.ப-236) என்றுவரையும் பகுதியால் இச்சொல்லின் நுண்மையை நுவல்கிறார் மு.வ.

**ச.பாலசுந்தரனார்**

தொல்காப்பிய ஆராய்ச்சிக் காண்டிகையுரையாசிரியர் ச.பாலசுந்தரனார், "என்மனார்" என்பது மரூஉ முடிவு கொண்டதொரு முற்று வினைச்சொல். அது என்னும்,அன்னார் ஆகிய இரு சொற்களின் மரூஉவாம். "செய்யும்" என்னும் முற்றுச் சொல் பல்லோர் படர்க்கைக்கண் வாராமையின், என்னும் என்பது திரிந்து அன்னார் என்பதனொடு புணர்ந்து ஒருசொல் நீர்மைத்தாக ஆக்கமுற்றது. (என்ம் + அனார் ஸ்ரீஎன்மனார்)" (தொல்-சொல். ச.பா.நூ.1) என்றுரைக்கும் பகுதி அவர் ஆய்ந்த ஆய்வின் முடிபாம்.

**தி.வே.கோபாலையர்**

தி.வே.கோபாலையர், இச்சொற்குக் கூறும் இலக்கணம் வருமாறு:

"தொல்காப்பியம் எழுத்தினும் சொல்லினும் செய்ம்மன என்னும் வாய்பாட்டுச் சொல்லைக் குறிப்பிடுகிறது. சேனாவரையர் அதனை வினைமுற்று என்பர். நச்சினார்க்கினியர் அதனைச் செய்யும் என்னும் பொருள் தரும் பெயரெச்சம் என்பர். அவர்

குறிப்பிடும் செய்ம்மன என்னும் வாய்ப்பாட்டுச் சொல் என்மன என்ற பெயரெச்சத்தோடு ஆர் விகுதி இணைய, பெயரெச்ச நிலைமாறி நிகழ்கால வினைமுற்று ஆயிற்று என்று கொள்ளலாம். என்மனார் என்ற சொல் தொல்காப்பியனார் தாமே படைத்துத் தம் நூலில் 60க்கு மேற்பட்ட இடங்களில் கையாண்ட சொல்லாகும்." (தொல்-சொல்-உரைக்கொத்து,தி.வே.கோபாலையர். ப-69) என்பது ஐயரவர்கள் தரும் அரிய விளக்கமாம். மேற்கண்ட வகையான் "என்மனார்" என்னுஞ்சொல் பற்றி உரையாசரியன்மார் கூறுமாற்றைத் தொகுத்து நோக்குழி, "என்ப" என்னும் முற்றுச் சொல்லைக் குறைக்கும் வழிக்குறைத்தல் என்பதனாற் பகரங் குறைத்தும், விரிக்கும் வழி விரித்தல் என்பதனான் மன், ஆர் என்னும் இரண்டிடைச் சொற் பெய்து விரித்தார் (திரித்தார்) தொல்காப்பியனார் என இளம்பூரணாரும், இது ஆர் ஈற்று நிகழ்கால முற்று வினைத்திரிசொல் என நச்சினார்க்கினியரும், இது எதிர்கால முற்றுச்சொல் எனினும் ஈண்டு இறந்தகாலம் குறித்து நின்றது எனத் தெய்வச்சிலையாரும் கருத்துரைக்கின்றனர்.

## முடிபு

இன்னவகையான் கண்ணுற்று நோக்கின், "என்மனார்" என்னுஞ் சொல் இளம்பூரணர் கூற்றுப்படி விகார மொழியாயின் (செய்யுள் விகாரம்), யாப்பமைதிக்கு இடர்பாடு உண்டாகுமிடத்தில் மட்டும் வாராமல், இந்நூலுள்ளும் சான்றோர் செய்யுளுள்ளும் யாண்டும் பயின்று வருதலான் இச்சொல் விகார மொழியன்று இயற்சொல்லேயாம். அன்றியும், இது எதிர்கால முற்றுச்சொல் என்பதும் பொருத்தமுடைத்தாம். அங்ஙனமே, இச்சொல் ஆசிரியர் தொல்காப்பியனாராலேயே படைத்தாளப் பெற்றதென்று ஐயரவர்கள் விதந்து சொல்லும் நடை நினைவுறத்தக்கது. அதற்றாக, இச்சொல் தொல்காப்பியனார்க்குப் பண்டையோர் பாலித்தது எனலும் ஓராற்றான் பொருந்தும். ஓராற்றான் அன்றி முற்ற முடிந்ததாகாதாம்.

## துணைநின்ற நூல்கள்


1. தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - இளம்பூரணம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை 1973.
2. தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - சேனாவரையம், கு.சுந்தரமூர்த்தியார் விளக்கவுரையுடன், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1981.
3. தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - தெய்வச்சிலையாருரை, கரந்தைத் தமிழ்ச்சங்கப் பதிப்பு 1929.
4. தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - கல்லாடம்+ஒருவருரை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1964.
5. தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு
-பி.சா.சுப்பிரமணிய சாஸ்திரியார் - 1930.
6. தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - ஆராய்ச்சிக்காண்டிகையுரை ச.பாலசுந்தரனார் - பெரியார் பல்கலைக்கழகம் 2012.
7. தொல்காப்பியம் - கிளவியாக்கம் - உரைக்கொத்து, தி.வே.கோபாலையர், சரசுவதிமகால் நூலகம் 2007.
8. மொழியியற் கட்டுரைகள். மு.வரதராசனார், பாரிநிலையம், சென்னை 2010.